
# திராவிடத்தால் வாழ்கிறோம்

850

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# மாநாடு

ர.பிரகாசு

65

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

## மக்களோடு மக்களாய் நின்ற இயக்கம்!

‘சுயமரியாதை இயக்கம்’, ‘நீதிக்கட்சி’, ‘திராவிடர் கழக’ மாநாடுகள் மட்டுமின்றி, ‘ஜாதி சங்க மாநாடுகள்’, ‘வணிகர்கள் மாநாடு’, ‘உழவர் மாநாடு’ என எண்ணற்ற மாநாடுகளில் பெரியார் பங்கேற்றிருக்கிறார். அந்த வரிசையில் சற்றே வித்தியாசமான மாநாடு என்றால் 1943-ஆம் ஆண்டில் திருச்சியில் நடைபெற்ற ‘சென்னை மாகாண உணவுப்பொருள் மாநாடு’.

இரண்டாம் உலகப்போர் காலகட்டத்தில் உலகெங்கும் ‘உற்பத்திச் சரிவு’, ‘விலைவாசி உயர்வு’, ‘பணவீக்கம்’, ‘வறுமை’, ‘பட்டினிக் கொடுமைகள்’ அதிகரிக்கத் தொடங்கின. அந்த நெருக்கடியான காலகட்டத்தில் 12.09.1943 அன்று ‘சென்னை மாகாண உணவுப்பொருள் மாநாடு’ திருச்சியில் கூட்டப் பட்டது. நீதிக்கட்சி அல்லது சுயமரியாதை இயக்கத்தின் பெயரால் அல்லாமல் பொதுவான பெயரால் மாநாடு கூட்டப்பட்டது. ஆனால், பங்கேற்றோர் பெரும்பாலும் நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவர்களே.

சென்னை மாகாணம் முழுவதும் இருந்து, சுமார் 500 பிரதிநிதிகளும், இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்களும் மாநாட்டிற்கு வந்திருந்தனர். திருச்சி, பப்ளிக் ஹாலில் நடைபெற்ற மாநாட்டை, தந்தை பெரியார் திறந்து வைத்தார். வரவேற்புரை ஆற்றிய ராவ் பகதூர் டி.மதுரம், நாட்டின் பல பகுதிகளில் மக்கள் உணவின்றி மாண்டு




வருவதாகவும், நிலைமை மிக மோசமாகி வருவதாகவும், உணவுப் பொருள் உற்பத்தியைப் பெருக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம் என்றும் கூறினார்.

“அறுவடை ஆரம்பமாகி இருப்பதால், சர்க்கார் களங்களிலே விலை நிர்ணயம் செய்தோ அல்லது வியாபாரிகளைக் கட்டுப் பாட்டு விலைக்கு வாங்கும்படி செய்தோ விலைவாசியைக் கட்டுக்குள் வைக்க வேண்டும்” என்றும் மதுரம் கேட்டுக்கொண்டார். உணவு உற்பத்திப் பெருக்கம் தொடர்பாக அன்றைய வேளாண் அமைச்சர் பி.டி.ராஜன் கொண்டுவந்த திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்றும் வரவேற்புரையில் வலியுறுத்தினார்.

தலைமையுரை ஆற்றிய கிருஷ்ணசாமி போர் குறித்தும், போரினால் ஏற்படும் பொருளாதாரச் சிக்கல்கள் குறித்தும், அவற்றை எதிர்கொள்ளும் முறைகள் குறித்தும் பல முக்கிய விஷயங்களைக் குறிப்பிட்டுப் பேசினார். “போர் நிகழும் காலத்தில் நோக்கம் அனைத்தும் தற்காப்புக்கு வேண்டிய தேவைகளை உற்பத்தி செய்வதில்தான் இருக்கும். பல நாடுகளில் மக்கள் விவசாயம் செல்வதில் இருந்து போர்க் கருவிகள் செய்ய அழைக்கப்பட்டதும், தகுந்த போக்குவரத்து வசதிகள் இல்லாததும் போர்க்காலத்தில் தோன்றும் நெருக்கடிகளுக்குக் காரணங்களாக உள்ளன. குறிப்பாக, கப்பல் போக்குவரத்து சீராக இல்லை. பர்மா வீழ்ச்சி அடைந்துவிட்டதால், நமக்கு உணவுப்பொருள்கள் வரும் பாதைகள் அடைபட்டுவிட்டன. நம் நாட்டுத் தேவையை, சரிப்படுத்துவதற்கு ரயில்வேக்கள் போதுமானதாக இல்லை. வண்டிப் பயணமும், படகுப் பயணமும்தான் உள்ளது. சாலை வசதிகளும் நிறைவாக இல்லை” என நாட்டின் நிலைமைகளைச் சுட்டிக்காட்டி அவற்றுக்கான தீர்வுகள் பலவற்றையும் எடுத்துரைத்தார்.

உணவுப்பொருள் பாதுகாப்புக்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்வது, அவற்றைச் சீராக விநியோகிப்பது, விலைவாசியைக் கட்டுக்குள் வைப்பது உள்ளிட்டவை தொடர்பாக 20 தீர்மானங்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன. சுயமரியாதை இயக்கத்தின் வழக்கமான பணிகளுக்கு மத்தியில், வாழ்வாதாரப் பாதிப்புக்கான குரலாக எழுந்த ‘உணவுப் பொருள் மாநாடு’ மக்களோடு மக்களாய் இந்த இயக்கம் ஒன்றி இருந்தது என்பதற்கான அடையாளமாய் பதிந்திருக்கிறது வரலாற்றில்..

...கூட்டம் திரளும்

## சமத்துவத்துக்கு எதிரான கேள்வி - வலுக்கும் கண்டனங்கள்!

இந்திய ஆட்சிப் பணி, பதவிகளுக்காக ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் முதல் நிலைத் தேர்வு 25.05.2025 அன்று நாடு முழுவதும் நடைபெற்றது. அதில் ஒரு வினாத்தாளில், சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தவர் யார் என்கிற கேள்விக்கு விடையாக, பெரியாரின் பெயருடன், அவரது ஜாதிப் பெயரையும் சேர்த்து அச்சிட்டுள்ளனர். இதற்கு பல்வேறு தரப்பினரும் கடும் கண்டனங்களைப் பதிவு செய்துள்ளனர்.

தமிழ்நாடு உயர்நிலை மேல்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் சங்கம் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில்,

‘சுயமரியாதை இயக்கத்தின் முதல் மாநாடான 1929-ஆம் ஆண்டு செங்கல்பட்டு மாநாடு நடைபெறுவதற்கு முன்பே, தந்தை பெரியார், அவர் பெயருக்குப் பின்னால் ஜாதியைச் சேர்ப்பதை நிறுத்திவிட்டார் என்கிற வரலாற்றினையும் பதிவு செய்துள்ளனர்.

“25.12.1927-க்குப் பிறகு வெளிவந்த ‘குடி அரசு’ பத்திரிகைகளில் அதன் ஆசிரியர் என ஈ.வெ.ராமசாமி என்றே குறிப்பிட்டார்.

ஜாதிக்கு எதிராக வரலாற்றுப் போராட்டங்களை நடத்திய ஒரு தலைவரை, ஜாதி ஒழிப்பிற்காகத் தன் வாழ்வின் இறுதி வரை எந்த சமரசமும் செய்து கொள்ளாமல் போராடிய தந்தை பெரியாரை ஜாதிப் பெயர் தாங்கி, இந்தியாவின் உயரிய அதிகாரிகளை உருவாக்குகின்ற அமைப்பு, நிலைநிறுத்துவது சமத்துவத்திற்கு எதிரானது’ எனவும் அந்த சங்கம் கண்டித்துள்ளது.

அரசாணை எதுவும் இல்லாமல் ஜாதிப் பெயரைப் பெயருக்குப் பின்னால் சேர்க்கக்கூடாது என்ற சாதனையை சத்தம் இல்லாமல் சாதித்த இயக்கம் ‘சுயமரியாதை இயக்கம்’. அதைச் சாதித்த தந்தை பெரியாருக்கு ஜாதி அடையாளம் சூட்டுவது, ஆரிய வன்மம் அன்றி வேறென்ன ? கண்டனக் கணைகள் டெல்லியை எட்டட்டும்.

## ஃப்ளாஷ்பேக்



### தளபதி தந்த குறளோவியம்!



க.மோகனசுந்தரம்

2003-ஆம் ஆண்டு நடைபெற்ற பாரதிதாசன் கவிதைகள் பேச்சுப் போட்டியில் என்னுடைய மகள் மோ.புவனாம்பாள், கல்லூரி அளவில் பேசி இரண்டாமிடம் பிடித்தார். அதைத் தொடர்ந்து அன்றைய கழக இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிவகங்கை மாவட்டத்திற்கு வருகை தந்தபோது, எங்கள் அமைச்சர் தா.கிருட்டிணன் அவர்களின் மூலம் தலைவர் தளபதி அவர்களை நேரில் சந்தித்து, வாழ்த்து பெறும் வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்தது. ‘குறளோவியம்’ நூலை அன்பளிப்பாக வழங்கி, எனது மகளைப் பாராட்டினார். அத்தகைய தருணத்தில் எடுத்துக்கொண்ட புகைப்படம் இது.

– க.மோகனசுந்தரம்,
அமைப்பாளர், தி.மு.க. இலக்கிய அணி,
மானாமதுரை நகரம், சிவகங்கை மாவட்டம்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

# பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

65

**சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

## அமெரிக்காவில் சமூகநீதியின் குரல்!

இந்திய அளவில் ஒடுக்கப்பட்ட மக்களின் அரணாக நின்ற தலைவர்கள் என்றால், தந்தை பெரியாரும், அண்ணல் அம்பேத்கரும் நம் நினைவுக்கு வருவர். அதைப்போல, அமெரிக்காவில் கறுப்பின மக்களின் மனித உரிமைகளுக்குக் குரல் எழுப்பிய போராளிகள் மார்ட்டின் லூதர் கிங், மால்கம் X இருவரும். ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளைப் பெற வெவ்வேறு வழிமுறைகளைப் பின்பற்றினாலும், இருவரின் இலக்கும் நிற பாகுபாடற்ற சமஉரிமை நிறைந்த அமெரிக்கா என்பதாகத்தான் இருந்தது. கொள்கையில் கொண்டிருந்த உறுதிக்காக இருவரும் உயிரையே விலையாகக் கொடுத்தவர்கள்.

சுதந்திர தேவியின் சிலை அமைந்திருக்கும் அமெரிக்க மண்ணில்தான் மனித உரிமைகளுக்குக் குரல்கொடுத்த மார்ட்டின் லூதர் கிங்கும், மால்கம் X-ம் வெவ்வேறு தருணங்களில் நிற வெறியர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்கள்.




அப்படி, கொண்ட கொள்கைக்காக உயிரையே பறிகொடுத்த மால்கம் X-ன் நூற்றாண்டு இது. நிறவெறிக்கு எதிராகவும், சமூக நீதிக்காகவும், மனித உரிமைகளுக்காகவும் போராடிய அவரது வாழ்க்கையை அறிந்து கொள்வது அவசியமானது.

அமெரிக்காவில் வாழும் ஆப்பிரிக்கப் பூர்வகுடி மக்களின் வலியையும் வேதனையையும் துயர்களையும், தன்னுடைய மூதாதையர்களின் வாழ்க்கை வரலாற்றின் வழி ‘வேர்கள்’ (ROOTS) என்ற தலைப்பில் நூலாக்கியவர் அலெக்ஸ் ஹேலி. இவருடன் இணைந்து தன்னுடைய வாழ்க்கை வரலாற்றை, கவித்துவமாகவும் அதே நேரத்தில் ஊக்கமூட்டும் ஒன்றாகவும் எழுதி இருக்கிறார் மால்கம் X. ‘மால்கம் X: என் வாழ்க்கை’ என்ற இந்நூலை வெ.கோவிந்தசாமி அவர்கள் ஆங்கிலத்தில் இருந்து மொழியாக்கம் செய்துள்ளார். ‘சிந்தன் புக்ஸ்’ பதிப்பகம் இந்நூலை வெளியிட்டுள்ளது.

நிறவெறிக்கு எதிராகப் போராடிய மால்கம் X-ன் இயற்பெயர் மால்கம் லிட்டில். லிட்டில் என்ற பெயரில் அடிமைத்தனத்தின் சுவடு இருப்பதால், அதை உதறிவிட்டு, X என்ற பின்னொட்டை பெயருடன் இணைத்துக் கொண்டார். இளம்பருவம் முதலே அடிமைத் தனத்தின் விளைவாக வறுமை, பசி, ஆதரவற்ற நிலை என பல கொடுமைகளை அனுபவித்த மால்கமின் வாழ்க்கை திசை மாறியது. பல சமூக விரோத செயல்களில் அவர் ஈடுபடத்தொடங்கினார். கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

சிறை இவருக்கு சிறகைத் தந்தது. வாழ்க்கையின் மீதான நன்மதிப்பீடுகளை ஏற்படுத்தியது, புத்தக வாசிப்புப் பழக்கமே இவை அனைத்திற்கும் அடித்தளமாக அமைந்தது. சிந்திப்பதற்குச் சிறந்த இடம் கல்லூரிகளுக்கு அடுத்து சிறைச்சாலைகள்தான் என்பதை அவர் உறுதியாக நம்பினார். பத்தாண்டு கால சிறைவாசத்திற்குப் பிறகு, தான் சார்ந்த மக்களின் விடுதலைக்காகப் போராடவேண்டும் என்ற வேட்கை ஏற்பட்டது.

‘நேஷன் ஆஃப் இஸ்லாம்’ என்ற இயக்கத்தில் தன்னை இணைத்துக்கொண்டு, ஆப்ரோ-அமெரிக்க மக்கள் அடிமைத்தனத்தில் தங்களை விடுவித்துக் கொள்வதற்கான ஒரே வழி இஸ்லாம்தான் என்று அவர் போதிக்கத் தொடங்கினார். குத்துச்சண்டை வீரர் முகமத் அலியுடன் நெருக்கம் ஏற்பட்டு, அவரது அரசியல் நடவடிக்கைகளிலும் தாக்கம் செலுத்தினார்.

நிறவெறிக்கு எதிரான வீரியமிக்க போராட்டத்தில், அமைதி வழியை மார்ட்டின் லூதர் கிங் நாடினார் என்றால், அதிரடி வழியைப் பின்பற்றியவர் மால்கம். அப்படியான மனிதரின் தன் வரலாற்றை, அவரது நூற்றாண்டில் சமூகநீதி அரசியல் பேசும் நாம் அறிந்துகொள்வது மிகவும் பொருத்தமான ஒன்றாக இருக்கும்.

...வாசிப்போம்.

## கருவூலம்

### தனுஷ்கோடி புயலுக்கு நிதி!

1965-ஆம் ஆண்டில், தனுஷ்கோடி பகுதியில் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தி.மு.க. தலைமை நிலையம் சார்பில், மூன்றாயிரம் ரூபாய் நிதியை மாநில முதல்வர் பக்தவத்சலம் அவர்களிடம் 01.01.1965 அன்று அளித்தது. இந்தத் தொகையைக் கழகப் பொருளாளர் கலைஞர், முதல்வரின் இல்லத்திற்கு நேரில் சென்று வழங்கினார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131